CS (Main) Exam 2019

SDF-B-TML

தமிழ் / TAMIL

தாள் II / Paper II

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question/part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) கொடைப் பண்பு குறித்துப் புற நானூறு தெரிவிக்கும் கருத்துகள் எவை ? விளக்குக. *10*

(b) செங்கோன்மை பற்றிய குறள் கருத்துகளைத் தொகுத்து மதிப்பிடுக. *10*

(c) கோவலனின் கடந்த கால வாழ்வு குறித்து மாடல மறையோன் தெரிவிக்கும் கருத்துகள் எவை ? *10*

(d) கும்ப கருணன் வதைப் படலத்தில் பேசப்படும் அறச்சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வுகளும் எவை ? விளக்குக. *10*

(e) மனித உடல் பற்றிய மாணிக்கவாசகரின் கருத்துகள் எவை ? ஆராய்க. *10*

Q2. (a) குறுந்தொகையில் பேசப்படும் தாவரங்கள் எவை ? அவை ஏன் பேசப்படுகின்றன ? ஆராய்க. *20*

(b) இளங்கோ வருணிக்கும் மதுரை நகரின் அமைப்பு எவ்வாறானது ? விளக்குக. *15*

(c) காலை நேரம் திருப்பாவையில் எவ்வாறு வருணிக்கப்படுகிறது ? விளக்குக. *15*

Optional Province · optionalprovince.com

Q3. (a) உருவ வருணனை வாயிலாக சிவபெருமான் பற்றிய புராணக் கதைகள் எவ்வாறு மாணிக்க வாசகரால் நினைவு கூறப்படுகின்றன ? ஆராய்க. *20*

(b) கும்பகருணன் வதைப் படலத்தில் மகோதரன் என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவம் யாது ? விளக்குக. *15*

(c) குற்றங் கடிதல் பற்றி வள்ளுவர் தெரிவிக்கும் கருத்துகள் எவை ? விளக்குக. *15*

Q4. கிழ்க்காணும் பாடலடிகளின் இடத்தையும் நயத்தையும் விளக்குக : ***20+15+15=50***

(a) "ஏற்றக் கலங்கள் எதிர்பொங்கி மீது அளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்" *20*

(b) "நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்" *15*

(c) "சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி ஆங்கு" *15*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : ***10×5=50***

(a) கண்ணனைத் தந்தையாகக் கருதிப் பாரதியார் கூறுவன எவை ? விளக்குக. *10*

(b) நாடகவியல் துறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று அண்ணா அறிவுறுத்துகிறார் ? *10*

(c) எதிர்ப்பண்புப் பாத்திரங்களை அகிலன் எவ்வாறு படைத்துள்ளார் ? விளக்குக. *10*

(d) மதங்களைக் கடந்து குடும்ப நலன்களும் சமூக நலன்களும் காக்கப்படுவது 'யாருக்கும் வெட்கமில்லை' நாடகத்தில் எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது ? விளக்குக. *10*

(e) மாடுகள் பாடுபொருளாக இருப்பதை நாட்டுப்புறப் பாடல்கள் கொண்டு விவரி ? *10*

Q6. (a) 'குடும்ப விளக்கு' என்ற நூல் தலைப்பின் பொருள் சிறப்பை விளக்குக. *20*

(b) மு.வ. பேசும் பொருளாதாரக் கருத்துகள் எவை ? அறத்துடன் அவை எவ்வாறு தொடர்பு-படுகின்றன ? *15*

(c) ஆநிரை கவர்தலும் ஆநிரை மீட்டலும் என்ற தமிழர் போர் மரபு முத்துப்பட்டன் கதைப்பாடலில் எவ்வாறு பொருந்துகிறது ? விளக்குக. *15*

Optional Province · optionalprovince.com

Q7. (a) "காகிதப் பூக்கள்" என்ற கவிதையின் நயங்களை விவரி. *20*

(b) நிக்கி என்ற நாய் மூலம் பொருளாதார - வர்க்க வேறுபாடுகள் எவ்வாறு விவரிக்கப்படுகின்றன ? *15*

(c) நாட்டுப்புறப் பாடல்களில் அவலச்சுவை இடம் - பெறுவதற்கான சூழல்கள் எவை ? விளக்குக. *15*

Q8. (a) பாரதியார் குறிப்பிடும் சேவகனின் இயல்புகள் எவை ? பக்தி நெறியுடன் அவை எவ்வாறு பொருந்தி அமைகின்றன ? ஆராய்க. *20*

(b) காதல் உறவின் தன்மைகள் சித்திரப் பாவையில் எவ்வாறு பேசப்படுகின்றன ? விளக்குக. *15*

(c) ஆன்மீகம் சிறுகதைப் பொருளாகியுள்ளதை குருபீடம் கதைகள் கொண்டு விளக்குக. *15*

Optional Province · optionalprovince.com